| MSSRF Science for Sustainable Development | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | **தேனி** | காலம் : | 19/04/2024 | முதல் | 23/04/2024 |
| | அறிக்கை எண் : | 032/ 2024 | வெளியீட்டு நாள் : | 18/04/2024 | | |

### தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (13.04.2024 **முதல்** 17.04.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 23-04-22024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13/04 | 14/04 | 15/04 | 16/04 | 17/04 | தேதி | நாள்-1 19/04 | நாள்-2 20/04 | நாள்-3 21/04 | நாள்-4 22/04 | நாள்-5 23/04 |
| 10.8 | 1.6 | 0.0 | 0.8 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 2 | 2 | 0 | 1 |
| 36 | 35 | 37 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 33 | 32 | 32 | 31 |
| 25 | 25 | 26 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 22 | 22 | 23 | 22 |
| 6 | 4 | 5 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 4 | 4 | 3 |
| 82 | 83 | 72 | 80 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 80 | 80 |
| 61 | 41 | 64 | 41 | 64 | | 20 | 20 | 20 | 20 | 20 |
| 6 | 7 | 10 | 7 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 6 | 8 | 6 | 8 |
| தென் மேற்கு | வட கிழக்கு | தெற்கு | வட கிழக்கு | தெற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | வட மேற்கு | வட கிழக்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஏப்ரல் 19, 20, 21 மற்றும் 23 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 31°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23°செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், மேற்கு, வடமேற்கு மற்றும் வடகிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

அதிக அதிகபட்ச வெப்பநிலை மற்றும் மிதமான காற்று காரணமாக ஏற்படக் கூடிய ஈரப்பத இழப்பினை ஈடுசெய்ய பயிர்களுக்கு அதிக அளவில் நீர் பாசனத்தினை மேற்கொள்ளவும்.

**கால்நடை வளர்ப்பு :**

வெப்பத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்க தினமும் போதுமான அளவில் தாதுக் கலவையினை கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும். குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக் கலவையினை கொடுப்பது மிகவும் அவசியமாகும். பகல் நேரங்களில் மாட்டு கொட்டகைகளின் பக்கவாட்டில் ஈரமான சணல் சாக்குககளை கட்டி விடவும். கால்நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 முதல் 100 லிட்டர் தண்ணீரை 4 தவணையாக பகிர்ந்து கொடுக்கவும்.

**விவசாயம் :**

கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள் 10 சதவீத நிலத்தில் கம்பு நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம்.

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு (19.04.2024 முதல் 23.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : கரும்பு, பீன்ஸ், கால்நடை.**

**கரும்பு:**

கரும்புக் பயிரில் மணிச்சத்து பற்றாக்குறையானது பரவலாக தென்படுகின்றது. சத்துப் பற்றாக்குறையின் அறிகுறியாக இலைகளின் நிறம் பசுமை கலந்த நீல நிறமாகவும், இலை குறுகியும் காணப்படும். கரும்புத் தண்டின் நீளம், விட்ட அளவும் குறைந்து காணப்படும். வளர்முனை வேகமாக சாய்கிறது. தூர் விடுதல் குறைகிறது, வேரின் வளர்ச்சியும் தடை செய்யப்படுகிறது. இதனை நிவர்த்தி செய்ய ஒரு ஹெக்டேருக்கு 1 டன் ராக்பாஸ்பேட் உரத்தினை இடலாம். மேலும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20கிராம் என்ற அளவில் டைஅமோனியம் பாஸ்பேட் (டிஏபி) உரத்தினை கலந்து 15 நாள் இடைவெளியில் இலைமேல் தெளிக்க வேண்டும்.

**பீன்ஸ்:**

நிலவும் பருவச்சூழ் நிலையின் காரணமாக பீன்ஸ் பயிரில் சாம்பல் நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. நோய் தாக்குதலின் அறிகுறியாக இலையின் மேல்புறத்தில் சிறிய வெண்மையான புள்ளிகள் காணப்படும். தீவிரமாகப் பாதித்த பகுதிகளில் இலைகள் முதிர்ச்சியடைவதற்கு முன்னரே உதிர்ந்து விடும். இதனை தவிர்க்க முன்னெச்சரிக்கையாக 10 லிட்டர் தண்ணீருக்கு 60 கிராம் சூடோமோனாஸ் மற்றும் 60 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி உடன் 10 மில்லி ஒட்டும் பசை சேர்த்து 10 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும். பாதிப்பு தீவிரமாக இருக்கும் பட்சத்தில், ஒரு ஏக்கருக்கு 100 மில்லி என்ற அளவில் டெபுகானசோல் மருந்துடன் 10 லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி என்ற அளவில் ஒட்டுப்பசை சேர்த்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

நிலவும் பருவச் சூழ்நிலையானது கால்நடைகளுக்கு தோல்பகுதியில் தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையால் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி ஆலோசனையை பெற்றுக் கொள்ளவும். மேய்ச்சலுக்காக கால்நடைகளை நீண்ட தூரம் நடக்க வைக்க வேண்டாம். கால்நடைகளுக்கு அதிக அளவிலான பசுந்தீவனம் மற்றும் அடர் தீவனங்களை கொடுக்கவும். மேலும் கால்நடைகளுக்கு தீவனம் கொடுக்கும் வேளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும்.

.